# தமிழ் வளர்ச்சியில் சமயங்கள்

**முனைவர் செ.மார்க்கண்டன்**
**இணைப்பேராசிரியர்**
**வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை – 117**

**49**

**ஆய்வுச் சுருக்கம்**:

சமயங்களால் தமிழ் மொழி வளர்க்கப்பட்டது என்ற வாதம் இம்மண்ணில் நிலவுகிறது. சமய முன்னிலைப் படுத்தலுக்காக நிகழ்ந்த போர்களே சமய வரலாற்றில் அதிகம்.எனவ, சமய கண்டனங்களும், வசைப்பாடல்களும் நிறைந்தது தான் பக்தி இலக்கியம் . இத்தகைய சமய இலக்கியம் எப்படி தமிழை வளர்த்திருக்க முடியும். தமிழ் வளர்ச்சியில் சமயங்கள் தன்னை வளர்த்துக் கொண்டதே உண்மையாகும். இக்கருத்தை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கரு சொற்கள்:**

சமயங்கள், தமிழ் , வளர்ச்சி ,பா, பாவினங்கள், பள்ளிக்கூடம்,மொழி, வினா- விடை முறை , உரைநடை.

**முன்னுரை**:

கால ஓட்டத்தில் இம்மண்ணையும் இம்மக்களையும் ஆண்டு ஆதிக்கம் செலுத்திய சமயங்கள் பல உண்டு. அவற்றுள் பௌத்தம், சமணம், கிறித்துவம், சைவம், வைணவம், இஸ்லாம் என எல்லா சமயங்களும் தன் வளர்ச்சிக்கு தமிழ்மொழியை கருவியாகப் பயன்படுத்திக் கொண்டனவே தவிர,தமிழை வளர்ப்பதற்கு என்று எந்த சமயமும் தனித்துத்துடன் செயல்பட்டதாகத் தெரியவில்லை. சமயங்கள் தன்னை வளர்த்துகொள்ள தமிழ் துணைநின்று உள்ளதை நாம் அறிவோம்.எனவே,தமிழால் வளர்க்கப்பட்டதே சமயங்கள் என்ற நோக்கில் இக்கட்டுரை தன்னை தகவமைக்க முயல்கிறது.

தமிழ் என்ற அடையளத்தை முன்னிறுத்தி தாங்கள் சமயங்களை வளப்படுத்திகொண்டனர். தமிழ்த் தேசியம் சார்ந்த தமிழ் மரபு ஒருபுறம் இயங்கிவந்துள்ளது. இம் மரபின் அடித்தளம் தமிழின் தனித்தன்மையைக் காப்பதும் வளர்ப்பதும் ஆகும். மொழி, வரலாறு, கலை, பண்பாட்டுத் துறையில் தமிழின் தொன்மையைப் பேணிக் காப்பதும், மீட்டுருவாக்கம் செய்வதும் ஆகும். இந்த மரபின் முன்னணி வீரர்களாகத் திகழ்ந்த தமிழறிஞர்கள் பலர். அவருள் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

தமிழ் வளர்ச்சியில் பௌத்தம்:

பள்ளிக்கூடம் என்ற சொல்லே பௌத்தர்களுக்கு உரியது என்பதை பின்வரும் கூற்றின் வழி அறியலாம். அம்முறையே,

> "சிறுவர்களின் கல்வியைப் பற்றியும் இவர்கள் கருத்தினைச் செலுத்தி, அவர்களுக்குத் தாய்மொழியை எழுதப்படிக்கக் கற்பித்து வந்தார்கள். நாம் இப்பொழுது வழங்குகிற, 'பள்ளிக்கூடம்' என்னும் சொல்லே, இவர்கள் கல்வியைப் பரப்புவதற்காகச் செய்துவந்த

முயற்சியை இனிது விளங்குகின்றது. 'பள்ளி' என்னும் பெயர்க்குப் பௌத்த ஜைனத் துறவிகள் வாழும் மடம் என்பது பொருள். பௌத்த ஜைனத் துறவிகள் தாங்கள் வாழும் பள்ளிகளின் கூடங்களில் பாடசாலைகளை வைத்துப் பாடஞ் சொல்லிவந்தமையால், பாடசாலைக்குப் 'பள்ளிக்கூடம்' என்னும் பெயர் உண்டாயிற்று. பௌத்த ஜைன மதங்கள் மறைந்து பல நூற்றாண்டுகள் கழிந்தும், இன்றளவும் 'பள்ளிக்கூடம்' என்னும் சொல் தமிழ்நாட்டில் வழங்கி வருகின்றது". (மயிலை.சீனி.வேங்கடசாமி; பௌத்தமும் தமிழும்; 2007;75-76)

பௌத்தர்களின் 'பள்ளிக்கூடம்' என்னும் சொல் தமிழ் கல்வி வரலாற்றில் தவிர்க்க முடியாத சொல்லாக மாறி இருப்பதை அனைவரும் அறிவோம்.

பௌத்த ஜைனர்கள் வருவதற்கு முன்னே தமிழ்நாட்டில் கல்விச்சாலைகள் இருந்திருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியருக்குக் 'கணக்காயர்' என்ற பெயர் சங்க நூல்களில் காணப்படுகின்றது. பௌத்தர்களும் ஜைனர்களும் தாய்மொழிக் கல்வியைப் பரவச் செய்ய அதிகமாகக் கருத்தைச் செலுத்தி 'பள்ளிக்கூடம்' என்ற கட்டமைப்பை எற்படுத்தியப் பெருமை பௌத்த ஜைனர்களுக்கே உரியதாகும்.

பௌத்த ஜைனர்களின் தமிழ்க்கொடை

"களப்பிர அரசர் காலத்திலே, பௌத்த சமணர்களால் தமிழ்ச் செய்யுள் வகையில் புதிய பாக்கள் தோன்றலாயின. சங்ககாலத்தில் பழைய வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்குவகைப் பாக்களே வழங்கிவந்தன. சங்ககாலத்துக்குப் பிறகு பௌத்த, சமணர்கள் விருத்தப்பா என்னும் புதிய பாவையும், பாவினங்களையும் புகுத்தினார்கள். இது, தமிழ்மொழிக்கு அவர்கள் செய்த பெரிய வளர்ச்சியாகும்."(மயிலை சீனி.வேங்கடசாமி; சமயங்கள் வளர்த்த தமிழ் ; 2002 ; 48)

சமண, பௌத்தர்கள் இலக்கண, இலக்கிய நூல்களை மட்டும் அல்லாமல், பா வடிவங்களான விருத்தப்பாக்களையும், பாவினங்களையும் புதிதாக உருவாக்கினார்கள். அதேப் போன்று இவ்வடிவங்கள் திடீரென்று தோன்றிவிடவில்லை. அப்பாக்களில் இருந்த குறைபாடுகள் காலப்போக்கில் நீக்கப்பட்டு, தமிழுக்குரிய மரபைப் பெற்று நிலைபெறுவதற்கு ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் கடந்திருக்கலாம்.

புதிய ஆக்கங்களை தோற்றுவிக்க வேண்டிய கட்டாயத்திற்கு சமயங்கள் தள்ளப்பட்டன. அடையாளத்தின் உச்சியில் இருந்த தமிழைத் தங்கள் சமய வளர்ச்சியில் அங்கமாக்கிக் கொண்டனர். பாலி, வடமொழி போன்ற மொழிகளில் சமயப் படைப்புகளைப் படைப்பதைக் காட்டிலும் தமிழ் மொழியில் அதிக சமயப்படைப்புகளைப் படைக்க வேண்டிய அவசியம் என்ன? தங்கள் சமய இருத்தலை, சமய ஆதிக்கத்தைத் தமிழ் மொழியில் செலுத்துவதின் வழியாக, தங்கள் சமயத்தின் ஆதி வரலாற்றையும், சமய நிலை நிறுத்தலையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த உகந்த மொழியாக தமிழ்மொழி இருந்ததே அதற்கான காரணமாகும். எனவே, சமயங்களால் தமிழ் வளர்ந்தது என்பதை விட, தமிழ் மொழியால் சமயங்கள் தன்னை வளர்த்துக் கொண்டன என்பது உண்மையாகும்.

**தமிழ் வளர்ச்சியில் கிறித்துவம்**:

"சாதியில் உயர்தவர்கள் சிலரும் கிறித்தவம் தழுவியதற்கு முக்கியக் காரணம் ஒன்றுண்டு. அதாவது, தமிழ் நாட்டினைப் பொறுத்தவரை தமிழ்மொழியின் வளத்தையும், நலத்தையும் இலக்கிய ஏற்றத்தையும் வைதிக நெறியினர் உணர்ந்ததாகக் காட்டிக் கொள்ளாத நிலையில் கிறித்தவர்கள் தமிழ்மொழியைக் குறித்து நடுவு நிலையான கருத்துக்களை வெளியிட்டனர். திருக்குறள், திருவாசகம் முதலியன மொழிபெயர்க்கப்பட்டன. திராவிட மொழிக் கோட்பாட்டிற்கு வித்திட்டவர்கள் இவர்களே. எனவே, தமிழ் உணர்வும் தமிழ் இனப் பற்றும் மிக்க சிலர் அக்கால நிலையில் தாமே கிறித்தவராகும் நிலை ஏற்பட்டது" (த.அருள் பத்மராசன்;கிருத்தவர் தமிழ் இலக்கணக் கொடை ; 2018 ; 02).

தமிழகம் வந்த பாதிரிமார்கள் தமிழரோடு உறவாடத் தமிழ் மொழியைக் கற்றனர்.தமிழ்மொழியைக் கற்கையில் அந்த மொழியின் பால் ஈர்க்கப்பட்டு அதன் தனித்தன்மையைத் தம் தாய் நாட்டவரும் உணர வேண்டும் என்று கருதித் தமிழ் இலக்கியங்கள் பலவற்றை மொழிபெயர்த்தனர். தமிழ் இலக்கியங்களைப் பிற மொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டுத் தமிழ்மொழியை உயர்ந்தது என்று உலகிற்கு உணர்த்தினர். உரைநடையை அறிமுகப்படுத்தினர். அச்சி பொறியைக் கொண்டு வந்து ஓலைச்சுவடிகள் பலவற்றை அச்சு வடிவில் நூலாக்கினர்.

தமிழ் இலக்கியப் பரப்பில் வீரமாமுனிவர் தொடாத துறைகள் இல்லை என்று சொல்லும் அளவிற்குத் தமிழ்த்தொண்டு புரிந்தார். வீரமாமுனிவர் பன்னிரண்டு மொழிகள் அறிந்தவர். அவர்தம் தாய்மொழியான இலத்தினில் கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், இலக்கணத் திறவுகோல் ஆகிய நூல்களைத் தம் தாய்நாட்டு மக்களுக்கென எழுதினார்.

"வினா - விடை முறை, தற்போது பாடத்திட்டத்தில் இருக்கும் செய்யுள் தொகுப்பு முறை முதலியன டாக்டர் போப் கல்வி முறையில் கொண்டு வந்த புதுமை". (த. அருள் பத்மராசன்; கிருத்தவர் தமிழ் இலக்கணக் கொடை ; 2018 ;12) கிறித்தவர்கள் கண்ட வினா விடை முறை இன்றும் மாணவனின் கல்வி தரத்தை அளவிடும் கருவியாகப் பயன்பட்டது வருவதை நாம் அனைவரும் அறிவோம். மேலும், தம் கல்லறையில் "தமிழ் மாணவன்" என எழுதச்சொன்ன போப் அவர்களின் தமிழ்மொழிப்பற்றை இந்நாடு நன்கு அறியும்.

"தமிழ் வளர்ச்சிக்கு மிக்க உபகாரமான அச்சியந்திர உபாயத்தை எம் நாட்டில் வருவித்தது அன்னோர் செய்த நன்றிகளுள் ஒன்றாம். தமிழில் தனி வான நூல்களை ஆக்கும் இயக்கத்தைத் தொடக்கிவிட்டவரும், நெடுங்கணக்கு முறையாய்ச் சொற்களின் அர்த்தத்தை விளக்கும் வனப்பு வாய்ந்த தமிழ் அகராதியைச் செய்து தந்தவரும் ஐரோப்பிய குருமாரே. விஞ்ஞானத்துறைகளிற் சில நூல்களை முதன் முதல் தமிழில் இயற்றினோரும், தமிழரின் கல்வியை விருத்தியாக்கும் பொருட்டு ஆங்கில பாடசாலைகளைத் தாபித்தோரும், அவற்றின் மூலமாய்ப் பல கலைகளுக்கு உரிய நூல்களைத் தமிழில் இயற்றியும் இயற்றுவித்தும் தமிழ் முன்னேற்றத்திற்குப் பேருதவி செய்தோரும் ஐரோப்பியக் கிறித்துவ சமய குரவரே. முன்னாளில் சமணப் பெரியோர் தமிழிற்குத் திருக்குறள், சீவகசிந்தாமணி

ஆகிய செந்தமிழ் நூல்களை உதவியதுபோல, பின்னாளில் தேம்பாவணி ஆகிய பத்திய நூல்களை உதவியவரும் ஓர் ஐரோப்பிய குரவரே. இத் தமிழ்வல்லுநர்களைப் பின் தொடர்ந்து நம் நாட்டுக் கிறித்துவர்களும், அவ்வக் காலத்தே தமிழின் முன்னேற்றத்துக்கு உரிய பல தொண்டுகள் செய்துள்ளனர்". (மயிலை.சீனி.வேங்கடசாமி;கிருத்துவமும் தமிழும்; 2020;முகவுரை-2).

ஐரோப்பியர் வருவதற்கு முன்னே தமிழ் மொழியில் தனி உரைநடைநூல் இருந்ததில்லை. இலக்கணம், இலக்கியம், நிகண்டு, சோதிடம், மருத்துவம் முதலிய எல்லா நூல்களும் செய்யுளிலே இயற்றப்பட்டு வந்தன. இவைகளுக்கு உரையாசிரியர்கள் இயற்றிய உரைகளைத் தவிர தனிப்பட்ட உரைநடை நூல் ஒன்றேனும் இருந்ததில்லை. ஆனால், பண்டைக் காலத்தில் உரைநடையும் செய்யுளுமாகக் கலந்து நூல்கள் இயற்றப்பட்டன என்பதை,

தொன்மை தானே,

உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே'

என்னும் தொல்காப்பியச் செய்யுளில் 238-வது சூத்திரத்தால் அறியலாம். பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளுக்கு உதாரணங்களாகும். ஆனால், அவ்விருநூல்களும் இறந்துவிட்டன. இப்போது, உரைநடையும் செய்யுளுமாகக் கலந்து இயற்றப்பட்ட நூலுக்கு எடுத்துக் காட்டாக இருப்பது சிலப்பதிகாரம் ஒன்றேயாகும்.எனவே ,உரைநடை இலக்கிய மரபை தோற்று வைத்தப் பெருமையும் கிருத்துவர்களையே சாரும்.

"மருத்துவம், கணிதம், இலக்கணம், நிகண்டு முதலிய எல்லா நூல்களும் (அவற்றின் உரைகளைத் தவிர) செய்யுளிலே இயற்றப்பட்டிருக்கின்றன. உரை நடையில் நூல் இயற்றும் வழக்கம் ஐரோப்பியரின் தொடர்பால் ஏற்பட்டதாகும்" (மயிலை.சீனி.வேங்கடசாமி;கிருத்துவமும் தமிழும்; 2020;15) என்ற தமிழைப்பற்றிய மர்டாக் துரையின் கருத்தும் எற்புடையதாகும். தமிழில் மட்டும் அல்ல, எல்லா இந்திய மொழிகளிலும் உரைநடை வளர்ச்சியடைந்தது. ஐரோப்பியரின் தொடர்பு உண்டான பிறகுதான் என்பதை மறுப்பதற்கில்லை.

"அண்மையில் காலஞ்சென்ற சிறந்த தமிழ்ப் புலவரான கிறித்துவர் ஒருவரைச் சில ஆண்டுக்கு முன்னர் கண்டு பேசினேன். பாதிரித் தமிழையும், கிறித்துவத் தமிழையும் பற்றி அவரிடம் கூறி, ஏன் நல்ல தமிழைக் கிறித்துவர்கள் வளர்க்கக்கூடாது என்று கேட்டேன். அவர் இந்தக் குறையை ஒப்புக்கொண்டு பெரிதும் மனம் வருந்தினார். “என்ன செய்வது? பாதிரிமார்கள் இடந்தரவில்லையே!, சொன்னாலும் கேட்கவில்லையே" என்று கூறி வருந்தினார். பாதிரிமார்களின் ஆதிக்கம் இருக்கும் வரையில் இலக்கியங்களில் பாதிரிகள் தலையிடுகிற வரையில் கிறித்துவத் தமிழும், பாதிரித் தமிழும் இருந்தே தீரும். ஆனால், இந்த நிலை இப்போது நீங்கி வருகிறது." (மயிலை சீனி.வேங்கடசாமி;2002;52) இக்கூற்று சமயங்கள் தன்னை வளர்க்க முயன்றனவே தவிர , தமிழை வளர்ப்பதை முதன்மை நோக்கமாக கொள்ளவில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது.

**தமிழ் வளர்ச்சியில் வைதீகம்**:

சமண, பௌத்த மதங்களை அழித்து வைதீகம் நிலைப்பெற்றது. இம்மண்ணில். பெரும்

கோயில்கள் முதல் , சடங்கு வழிப்பாட்டு நெறிகளையும் கூட வைதீக மரபு தனதாக்கிக் கொண்டது . இதற்கான சான்றாக காஞ்சிபுர பல கோயில்களை முன்வைக்கலாம் . ஆனால் இங்கு தமிழ் வளர்ச்சி குறித்தான விவாதமே முதன்மையானது. வைதீகம் என்ற பொது சொல்லின் கீழ் சைவமும், வைணவமும் பிரியாமல் இருந்த காலத்தில், இரண்டு மதங்களும் சேர்ந்து சமண பௌத்த மதங்களை அழிக்க நிகழ்த்திய போர் மரபு அல்லது வசைப்பாடும் மரபே வைதீக மரபாகும். வெவ்வேறு மதங்களுக்கான சண்டைகளின் வழியே தங்கள் மதங்களை நிலை நாட்ட, பிற மதங்களைச் சாட எழுந்த இலக்கியங்கள் எப்படி தமிழ் மொழி வளர்ச்சியை முதன்மை நோக்கமாக எடுத்திருக்க முடியும். தொன்மை வாய்ந்த தமிழ் மொழியில் சமயக் கருத்துகளை நிலை நாட்ட முனைந்தவர்கள் தமிழைச் சமய வளர்ச்சிக்கான ஆயுதங்களாகப் பயண்படுத்திக் கொண்டார்களே தவிர, தமிழ் மொழி வளர்ச்சிகான பங்களிப்பு என்பது குறைவுதான். எனவே, சமயங்கள் தன்னை வளப்படுத்தி, நிலைநிறுத்த தமிழைப் பயன்படுத்திக் கெண்டதே உண்மையாகும்.

வைதீக சமயம் மட்டும் அல்லாமல் சமண பௌத்த கிறித்தவ சமயங்களும் இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டே தமிழில் பல படைப்புகளைப் படைக்க முற்பட்டுள்ளனர். சமண பௌத்த சமயங்களுக்கு எதிர்ப்பாகவும், சைவ, வைணவ சமயங்களுக்குச் சார்பாகவும், ஒருபுதிய இயக்கம் தோன்றியது. அதுவே பிற்காலத்தில் பக்தி இலக்கிய காலமாக மாறியது.

"சங்க காலத்திலிருந்தே வைதிக சமயத்தவரும், பௌத்தரும், சமணரும் எத்தகைய குரோதவுணர்வுமின்றித் தமிழிலக்கியங்கள் படைத்து வந்தனர். மதுரைக் காஞ்சி என்னும் பழந்தமிழ் நூலிலே அந்தணர் பள்ளியும், அமண் பள்ளியும், பௌத்தப் பள்ளியும் அடுத்தடுத்துக் கூறப்படுகின்றன.எனினும் பல்லவர் காலத்திலே தோன்றிப் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாவாணர்களாகிய நாயன்மாரும், ஆழ்வாரும் புறச்சமயத்தவராகிய பௌத்தரையும் சமணரையும் பலவாறு எள்ளி நகையாடியும் வெறுத்தும் பாடல்கள் பாடியுள்ளனர்"(க.கைலாசபதி; பண்டைய தமிழர் வாழ்வும் வழிபாடும்;1999;71) நாயன்மாருள் ஒருவராகிய ஞானசம்பந்தர் பதிகங்களில் சமண பௌத்தரைப் பற்றிய கண்டனம் செய்திகள் நிறைந்து காணப்படுகின்றன. இத்தகைய போக்குகள் சமய முதன்மைச் சுயசார்பு தன்மையைக் காட்டுவதாகும். இது தமிழ் மொழியை வளர்க்கும் வாதங்களாக எப்படி இருக்க முடியும். நாயன்மார்களும், ஆழ்வார்களும் சமய வாதங்களை முன்னெடுக்க, பிற சமயங்களை கடுமையான வன்சொற்களால் சாடிப் பாடிய பாடல்கள் எப்படி தமிழை வளர்க்க பயன்பட்டிருக்கும். எனவே, சமயங்கள் தன்னை வளர்த்துக் கொள்ள தமிழ்மொழியைப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதே உண்மையாகும்.

"வெறுப்போடு சமணர் முண்டர்
விதியில்சாக் கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில்
போவதே நோயதாகிக்
குறிப்பெனக் கடையு மாகில்

கூடுமேல் தலையை யாங்கே
அறுப்பதே கருமங் கண்டா
யரங்கமா நகரு ளானே!"

என்று, 'புலையறமாகி நின்ற புத்த-சமண சமயங்களைத் தலையறுக்க', விரும்பித் திருவரங்கத்தானைப் பாடிய தொண்டரடிப் பொடியாழ்வாரும், நாயன்மார், ஆழ்வாருடைய உளக்கொதிப்பிற்கு உதாரணக் குரல்களைத் தந்துள்ளனர் எனலாம். பக்திவலையிற்படுவோன் இறைவன் என்று அன்பு நெறி போதித்த அருளாளராகிய இவர்கள் 'தலையறுக்கும்' வெங்கொடுமைத் தொழிலைக்கூடக் கூசாது பேசுமளவிற்குக் கருத்துக்கள் ஏன் வலிமையடைந்தன; அந்த மனோநிலை எவ்வாறு சிறந்த இலக்கியமாகப் பரிணமித்தது; இத்தகைய எண்ணம் உடையவர்கள், எப்படி தமிழை வளர்த்து இருக்க முடியும். சமயங்களை வளர்க்க முயற்சித்தார்களே தவிர, தமிழ் மொழியை வளர்க்க எந்த பக்தி இயக்கமும் முயன்றதாக எண்ணத் தேவையில்லை. தங்கள் சமயங்களை மண்ணில் நிலை நிறுத்தவே இலக்கண இலக்கியங்களைப் தமிழில் படைத்துக் கொண்டார்கள். பழங்காலந்தொட்டே இருந்த தமிழின் தொன்மையைச் சமயங்கள் படைப்புகளின் வழியாக நிலைநிறுத்தியது.

"தமிழ் நாள்தோறும் வளர்ந்தும் குறைந்தும் பல சொற்களை இழந்தும் புதுக்கியும் புதுச்சொற்களை ஏற்றும் பழஞ்சொற்களுக்குப் புதுப்பொருள்களைக் கொடுத்தும்கால வெள்ளத்தை எதிர்த்து நின்று சாவாப் பெருவாழ்வு வாழும் உயிரோட்டமுள்ள ஒரு வாழும் மொழியாகும்.அதன் தோற்றம் தமிழ் மனிதச் சமுதாயத்தின் தோற்ற நிலைகளோடு பிரிக்க முடியாத வண்ணம் இணைந்தேயுள்ளது".

(அகத்தியதாசன்; வழிபாட்டு வரலாறு;2004;92-93) தமிழ்மொழியின் ஆய்வு அதனைப் படைத்துப் பயன்படுத்தும் தமிழ் மனித சமுதாயத்தின் ஆய்வாகவே அமைகிறது.தமிழ்ச் சமுதாயத்தோடு மிகப் பழங்காலத்திலேயே சமயத்துறைக் கோட்பாடுகள் இருந்ததாகத் தெரிகிறது. தமிழில் தாய்த் தெய்வங்களின் பெயர்கள் சமயத்துறைக் கோட்பாடுகளோடு இணைந்து பிணைந்துள்ள முறையினை அறிய முடிகிறது.எனவே, சமயங்கள் தமிழ் மொழியோடு பிணைந்து இருப்பதை அனைவரும் அறிவோம்.சமயங்கள் தன்னை வளர்த்து நிலை நிறுத்திக் கொள்ள தமிழ் மொழியைப் பயன்படுத்தி கொண்டனர் என்பதே நிதர்சனமாகும்.

**முடிவுரை**

சமயப் போர் நிகழ்த்திய சமயவாதிகளுக்குப் பெரும் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது தமிழ் மொழியாகும். சமண, பௌத்த, வைதீக, கிறித்துவ சமயங்கள் தன்னை வளர்த்துக் கொள்ள தமிழ் மொழியைப் பயன்பத்திக் கொண்டுள்ளனர். எனவே, சமயங்கள் வளர்த்த தமிழ் என்பது பொறுத்தமற்றதாகும். எனவே, தமிழ் வளர்த்த சமயங்கள் என்பதே உண்மையாகும். சிறுபான்மை இக்கருத்தில் மாற்றம் இருக்கலாம். ஆனால், பெரும்பான்மை தமிழ் வளர்த்த சமயங்கள் என்பதே சாலச் சிறந்ததாகும்.

**துணை நின்ற நூல்கள்**

1) மயிலை. சீனி. வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும், பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்

கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

2) மயிலை சீனி. வேங்கடசாமி, சமயங்கள் வளர்த்த தமிழ், எம்.வெற்றியரசி, மனை எண் - 9, கதவு எண் - 26, ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், சென்னை - 600 088

3) கலாநிதி க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், வெளியீடு & விற்பனை குமரன் பப்பிஷர்ஸ் 3, மெய்கை விநாயகர் தெரு, வழி : குமரன் காலனி 7வது தெரு, வடபழநி, சென்னை-600 026.

4) மருத்துவர் அகத்தியதாசன், வழிபாட்டு வரலாறு , நாட்டுப்புறவியல் ஆய்வுக்குடில் வல்லம் 621 710

5) மயிலை சீனி. வேங்கடசாமி கிறித்தவமும் தமிழும், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை 600 005.

6) முனைவர் த. அருள் பத்மராசன், கிறித்தவர் தமிழ் இலக்கணக் கொடை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES இரண்டாம் முதன்மைச்சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113